பக்கங்கள் 15 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 08 வியாழக்கிழமை 21.03.2024 அதிர்வு 234

ஐந்து விசைப்படகுகளுடன்

## இந்திய மீனவர்கள் 32 பேர் சிறைப்பிடிப்பு

(எஸ்.நிதர்ஷன, ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி நுழைந்து மீன்பிடித்த 32 இந்திய மீனவர்களை ஐந்து விசைப்படகுக 04



# சபாநாயகரின் தலை தப்புமா?

**இன்று மாலை நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது வாக்கெடுப்பு**
**வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அமைச்சர்களும் நாடு திரும்பினர்**


**சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.**

**இதனால் வெளிநாடுகளுக்குப் பறந்திருந்த அமைச்சர்கள் அவசரமாக நாடு திரும்பியுள்ளனர். அதேவேளை, வெளிநாடுகளுக்குப் பயணிக்கத் திட்டமிட்டிருந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பயணத்தைப் பிற்போட்டுள்ளனர்.**

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமானது. முன்னதாக 20 ஆம் திகதி (நேற்று) மாலை வாக்கெடுப்பு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், எதிரணியின் கோரிக்கையின் பிரகாரம் விவாதத்துக்கு மேலும் ஒரு நாள் ஒதுக்கப்பட்டது. இதனடிப்படையில் 04

# கோப் குழுவில் இருந்து டிலானும் விலகல்

## இதுவரை 11 பேர் இராஜிநாமா



கோப் எனப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவும் விலகியுள்ளார்.

கோப் குழுவின் தலைமைப் பதவிக்கு மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு தெரிவித்து நேற்று வரை 10 எதிரணி எம்.பிக்கள் மேற்படி குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையிலேயே எதிரணி 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# 12 தமிழ் அரசியல் கைதிகளையும் விரைவாக விடுதலை செய்யுங்கள்

## ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள்

**(எஸ்.நிதர்ஷன்)**

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும் தேர்தலுக்கு முன்னர் விரைவாக விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

இதற்கமைய சிலர் விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னமும் 12 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆகையினால் அவர்கள் அனைவரையும் விரைவாக விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்." – என்றார்.



# வடக்கு ஆளுநரைச் சந்தித்த நியூசிலாந்து துணைத் தூதுவர்

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் அன்ரேவ் ட்ராவெள்ளர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர், ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

மாகாணத்தின் கல்வி, பொருளாதார, வாழ்வியல்நிலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பிலும், முதலீட்டு வலயங்களை ஸ்தாபித்தல் தொடர்பிலும் ஆளுநரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் புலம்பெயர் தேசத்து உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர், இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.

# மூத்த ஊடகவியலாளர் ஹரீம் காலமானார்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் அல்ஹாஜ் எஸ். ஏ. ஹரீம் (வயது 77) நேற்று கொழும்பில் காலமானார்.

நீண்ட காலமாக ஊடகத்துறையில் பணியாற்றி வந்த அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட உறுப்பினருமாவார்.

இலக்கம் நுரு 2/5, டயஸ் பிளேஸ் குணசிங்கபுர இல்லத்தில் மிக நீண்ட காலமாக வசித்து வந்த அன்னாரது ஜனாஸா நேற்று குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் பெருந்திரளா னோரது பிரசன்னத்துடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.





# உலக வாய் சுகாதார தினத்தையொட்டி கண்ணகிபுரத்தில் பற்சிகிச்சை முகாம்

(ஆதம்)

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த மாபெரும் பற்சிகிச்சை முகாம் நேற்று புதன்கிழமை (20) அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் கண்ணகி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

"மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்" எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வீ.பபாகரன், கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், ஆலையடி வேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பீ.அகிலன், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், கண்ணகி மகா வித்தியாலய அதிபர் ரீ.ராசநாதன் மற்றும் பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், டாக்டர் ஹபீல் ஆகியோர் இக்கருத்தரங்கில் விரிவுரையாற்றினர்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு, மருத்துவ முகாம், விழிப்புணர்வுக் கருத்தரங்கு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரியின் பூரண ஒத்துழைப்புடன் பற்சிகிச்சை முகாம் இடம்பெற்றது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





## இந்திய....

ளுடன் இலங்கைக் கடற்படை பிடித்துள்ளது.

தமிழக மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் சென்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கைக் கடற் படையினர் கைது செய்து காங்கேசன் துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டு விசைப் படகுகளையும் அதிலிருந்த 7 மீனவர்க ளையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் மீன்வளத்துறை அதி காரிகளிடம் ஒப்படைக் கப்படவுள்ளனர்.



## சபாநாயகரின்....

இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப் படவுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர் பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவு றுத்தல்களைப் புறந்தள்ளிய வகை யிலேயே அந்தச் சட்டம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகருக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணையைக் கொண் டுவந்துள்ளது.

இந்தப் பிரேரணையை ஆதரிக்க எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண் டுள்ளன. எனினும், குறித்த பிரேர ணையை எதிர்த்து சபாநாயகரைக் காப் பாற்றுவதற்கு ஆளும் தரப்பும் பல்வேறுபட்ட வியூகங்களை வகுத்துள் ளது.

இன்றைய தினம் கட்சி தாவலுக்கும் சாத்தியம் இருக்கின்றது எனத் தெரிய வருகின்றது.

## கோப் குழுவில்....

எம்.பி. டிலான் பெரேரா இன்று கோப் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளார்.

இதுவரை மொத்தமாக 11 எதிரணி எம்.பிக்கள் கோப் குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப் பினர்களான எரான் விக்கிரமரத்ன, தயாசிறி ஜயசேகர, சரித ஹேரத், இரா. சாணக்கியன், ஹேஷா விதானகே, காமினி வலேபோட, எஸ்.எம். மரிக்கார், வசந்த யாப்பா பண்டார, துமிந்த திஸாநாயக்க, அநுரகுமார திஸாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் கோப் குழு வில் இருந்து விலகியுள்ளனர்.




| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எந்தத் தேர்தல் முதலில்?

பொதுத்தேர்தலா? அல்லது ஜனாதிபதித் தேர்தலா? எது முதலில் நடக்கும்?

- இதுதான் இலங்கை அரசியலில் இப்போது பிரதான பேசு பொருளான கேள்வி.

இந்த விவகாரம் குறித்து இறுதியான தீர்மானம் பெரும்பாலும் இன்று மாலை எடுக்கப்படக் கூடும் என கொழும்பின் சில செய்தி வட்டாரங்கள் உறுதியாக நம்பிக்கை தெரிவித்தன.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் இன்று மாலை கொழும்பில் முக்கிய சந்திப்பு ஒன்று நடக்கவிருக்கின்றது. அந்தச் சந்திப்பில் எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பது குறித்து ஒரு தீர்மானம் எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது, எப்படி என்றாலும் வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடந்தாக வேண்டும். அதை முற்கூட்டி நடத்துவதற்கோ அல்லது பின் தள்ளுவதற்கோ சட்டத்தில் இடம் ஏதும் இல்லை.

இப்போது, அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதா? அல்லது அதற்குப் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதா என்ற விடயமே பேசு பொருளாக இருக்கின்றது.

அந்த முடிவை எடுக்கும் தற்றுணிபு அதிகாரம் கூட ஜனாதிபதி வசம்தான் உள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை உள்ளது. அதற்கு முன்னர் இப்போது எச்சமயத்திலும் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து, பொதுத்தேர்தலை நடத்த உத்தரவிட முடியும்.

கடந்த பல மாதங்களாக அமெரிக்காவில் அஞ்ஞாத வாசம் செய்து வந்த மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அண்மையில்தான் நாடு திரும்பினார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தச் செய்து, தமது கட்சியை ஸ்திரமான நிலைக்கு மீண்டும் கொண்டு செல்ல வைக்கும் எண்ணத்துடன் தான் அவர் நாடு திரும்பினார் என்று கூறப்படுகிறது.

ஆனால், இன்னும் ஆறு மாதங்களில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதி யாகும் நப்பாசையில் இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றிக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதா அல்லது ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவதா என்ற மந்திராலோசனையில் முடிவெடுக்க முடியாதவராகச் சிக்கிக் கிடக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

பொதுத் தேர்தலுக்குத் தாம் முதலில் அழைப்பு விடுக்க, அதை லாவகமாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டால், அதன் பின்னர் நடக்கக்கூடிய ஜனாதிபதி தேர்தல் தமக்கு பேரடியாகிவிடும் என்று அஞ்சுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால், தங்களின் மொட்டுக் கட்சியின் தயவில் தங்கியிருக்கும் ஜனாதிபதியைப் பதவியில் வைத்துக் கொண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டால், அடுத்த நாடாளுமன்றத்தில் தங்கள் கட்சியின் நிலையை ஓரளவுக்கேனும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று பஸில் ராஜபக்ஷ உட்பட்ட மொட்டுக் கட்சித் தரப்பு கருது கின்றது.

ஜனாதிபதி தேர்தலை முதலில் நடக்க அனுமதித்து, அத்தேர்தலில் தங்கள் ஆதரவு பெற்ற வேட்பாளர் வெல்ல முடியாத நிலைமை நேர்ந்தால், அதன் பின்னர் நடக்கக்கூடிய பொதுத் தேர்தலில் தங்கள் கட்சியே மிஞ்சாதென்று மொட்டு கட்சி அஞ்சுகின்றது.

அதனால், எது, எப்படி என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழு அழுத்தம் கொடுத்தாவது பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்துவிட வேண்டும் என்று விடாப்பிடி நிலையில் நிற்கின்றது மொட்டுக்கட்சி.

ஜனாதிபதி தேர்தலில் யாருடன் அணி சேர்வது, எந்த தரப்புடன் சேர்ந்து கூட்டமைப்பது, தேர்தல் வியூகத்தை எப்படி உருவாக்குவது என்பவை குறித்தெல்லாம் தீர்மானம் எடுக்க முடியாமல் தள்ளாடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பொதுத்தேர்தலை முற்கூட்டியே நடத்தக் கோரும் வலியுறுத்தல் மற்றொரு தலையிடி தான்.

இன்றைய சந்திப்பில் பஸில் ராஜபக்ஷவை அவர் எப்படிச் சமாளிக்க போகின்றார் என்பதில்தான் இலங்கை அரசியலின் போக்குத் தங்கி இருக்கின்றது.



### கனகசிங்கம் பத்மாவதி நினைவாக

# வற்றாப்பளையில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் 17 லட்சம் ரூபா பெறுமதியான வீடு கையளிப்பு!

காரை நகரை சேர்ந்த கனகசிங்கம் பத்மாவதி நினைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடு ஒன்று அமைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று (20) புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

முதல் நிகழ்வாக ஆலயத்தில் இருந்து படங்கள் எடுத்துவரப்பட்டு அங்கு பெயர் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டு வீட்டை சம்பிரதாய பூர்வமாக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் திறந்து வைத்து வீட்டு உரிமையாளரிடம் திறப்பை கையளித்தார்.

குறித்த பயனாளியின் ஐந்து பேர் கொண்ட குடும்பம் சிறிய பாதுகாப்பற்ற ஓலை குடிசையில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் வற்றாப்பளை கிராம அமைப்புகள் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகளிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக காரைநகரை சேர்ந்த கனகசிங்கம் பத்மாவதி ஆகியோர் நினைவாக அவர்களது உறவினர்களால் 12 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. மேலதிகமாக தேவைப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியை சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது.





மொத்தம் 17 லட்சம் ரூபா பெறுமதியில் இந்த வீடு, மலசல கூடம், மின்சார இணைப்புடன் நிர்மாணிக்கப் பட்டது.

இதில் மாகாண விவசாய முன்னாளர் அமைச்சர் க.சிவனேசன், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை மருத்துவர் கலாநிதி செந்தில் குமரன், சந்நிதியான் சைவ கலை பண்பாடு பேரவை உறுப்பினர்களான சிவநாதன், தயாபரன், செ. ஞானசபேசன், சிறிகாந்தன், கு.தெய்வேந்திரம் மற்றும் தொண்டர்கள், வற்றாப்பளை கிராம அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மூதூர் பொலிஸில் விசேட இப்தார் நிகழ்வு

(கிண்ணியா நிருபர்)

மூதூர் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட இப்தார் நிகழ்வு மூதூர் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தின் முற்படைகளின் தளபதிகளும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும், மாவட்டத்தின் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன் மாவட்டத்தின் சகல பொலிஸ் நிலையத்தின் முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் உள்ளூர் உணவு விற்பனை நிலையம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் புலம் பெயர்ந்த உறவுகளின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்ட கைத்தொழிலாளர்கள் சங்கத்தின் உள்ளூர் உணவு உற்பத்திகளின் விற்பனை நிலையம் மற்றும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரண நிலையம் என்பன இன்று வியாழக்கிழமை (21) காலை மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மன்னார் மாவட்ட கைத்தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், மேலதிக அரச அதிபர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், புலம் பெயர் உறவுகளின் அமைப்புகளின் பிரதிநிதிகள், உதவி மாவட்ட அரச அதிபர், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளூர் கைத்தொழில் சங்கத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் உள்ள வைத்தியர்களைத் தற்காலிகமாக இடமாற்றுங்கள்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் உள்ள அனைத்து வைத்திய அதிகாரிகளையும் அவர்கள் பாதுகாப்பு கருதி வேறிடத்துக்கு தற்காலிகமாக இடம் மாற்றுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரை கேட்டுள்ளது.

சுகாதார அமைச்சரின் செயலாளர் டாக்டர் அசேல குணவர்தனவுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்.

அங்குள்ள எட்டு மருத்துவ அதிகாரிகளையும் அக்கரைப்பற்று பொத்துவில் கல்முனை மற்றும் அம்பாந்தோட்டை பிலியந்தல பியகம ஆகிய இடங்களுக்கு தற்காலிகமாக இடமாற்றுமாறு அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் அங்கு ஏற்பட்ட அசாதாரண சம்பவம் காரணமாக வைத்திய அதிகாரிகள் கடந்த 12 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் வைத்திய சாலை நடவடிக்கைகள் முற்றாகச் செயலிழந்துள்ளது.

அதன் காரணமாகப் பொது மக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த இரு நாள்களாகப் பலதரப்பட்ட பேச்சுள் இடம்பெற்ற போதிலும் வைத்திய சாலை இன்னும் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# வறுமை என்பது எமக்கான உரிமைச் சீட்டு அல்ல அதிலிருந்து நிரந்தரமாக விடுதலைபெற வேண்டும்

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் முஹம்மது ஹனீபா தெரிவிப்பு

(சர்ஜுன் லாபீர்)

வறுமை என்பது எமக்கான உறுமைச் சீட்டு அல்ல. அதிலிருந்து வறுமைக்குட்பட்டவர்கள் நிரந்தரமாக நீங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

வெள்ளத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட வறுமைக்கு உட்பட்ட மக்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 400 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று (20) அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். அஸாருத்தீன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்




அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய உலகில் பிறப்பில் ஏழ்மையில் வாழ்ந்தவர்கள்தான் அதிகமானோர் பணக்காரர்களாக உருவாகியுள்ளார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஏழ்மையின் தன்மை புரியும் அதனால்தான் அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள். அது போல் நீங்களும் எதிர்காலத்தில் முன்னேற வேண்டும். ஏனையவர்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றமடைய வேண்டும்.

இன்றைய காலத்தில் குறிப்பாக வறுமைக்கு உட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கியுள்ளார் கள். எனவே அந்தச் சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை நற் பிரஜைகளாக மாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வுக்கு நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், சம்மாந்துறை பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் ஜே.பஹிலான், கிராம சேவகர்கள் மற்றும் செஞ்சிலுவை அமைப்பின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







## உண்ணாவிரதமும் பெண்களும்:

# அமெரிக்க பெண் உரிமை போராட்டங்கள்: ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகம்!

● **ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உலக வரலாற்றில் பெண்களின் உரிமைக்காக உண்ணாவிரத போராட்டங்களை மேற்கொண்டு, தங்கள் கோரிக்கைகளை வென்றுள்ளனர். அமெரிக்க பெண் உரிமை போராட்டத்தில் பெண்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம் உண்ணாவிரதமாகும். இதற்கு ஒப்பாக ஈழத்தில் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போராட்டம் உயிரீகத்தின் உச்சமாக விளங்குகிறது.

**அமெரிக்க பெண் உரிமை போராட்டம்**

அலஸ் ஸ்டோக்ஸ் பால் (யுடைஉந ளுவழமநளீயரட) ஒர் அமெரிக்க பெண்ணியவாதியும், பெண்கள் உரிமை ஆர்வலர் ஆவார். அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்துக்கான பிரச்சாரத்தின் முன்னணி மூலோபாயவாதிகளில் இவரும் ஒருவர்.

அந்தக் காலத்தில் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பெண் வாக்களிக்கும் உரிமைக்காகவும் பாலின




பாகுபாட்டை எதிர்த்து அலஷ் பால், லூசி பர்ன்ஸ் மற்றும் பிறருடன் இணைந்து, பெண் வாக்குரிமை போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்.

உரிமைக்கான பெண்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் வெற்றிகரமான பிரச்சாரத்தின் மூலம் அமெரிக்காவில் பிரபல்யமானார். இதன் விளைவாக ஓகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

1885 இல் நியூ ஜெர்சியில் பிறந்த அலஷ் பால், (ஜனவரி 11, 1885 – ஜுலை 9, 1977) தன் சிறு வயதில் இருந்தே பெண்களுக்கான வாக்குரிமை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். அவர் சமூகப் பணியைப் படித்தாலும், குடியேற்ற வீடுகளில் ஏழைகளுக்குச் சேவை செய்தாலும், பெண்களுக்கான உரிமைக்காக சமூகப் பணியை தொடர்ந்து மேற்கொண்டார். உயர் கல்வியில் அவர் உயிரியல் மற்றும் சமூகவியலில் பட்டங்களை முடித்த பிறகு, பொருளாதாரம் மற்றும் சமூகவியலில் தனது படிப்பைத் தொடர 1907 இல் பிரிட்டனுக்குச் சென்றார்.

அவர் பிரிட்டனில் பெண்கள் சமூக மற்றும் அரசியல் ஒன்றியத்தில் (WSPU) சேர்ந்து, பெண்களின் சம உரிமைகளுக்காக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் ஒத்துழையாமை ஆகியவற்றில் பங்கேற்றார். இதன் விளைவாக, அவரும் பிரிட்டனில் உள்ள மற்ற பெண் வாக்குரிமையாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

பெண் வாக்குரிமைக்காக போராட்டம்

பெண்களின் வாக்குரிமைக்காக நுஅஅநடைநெ மற்றும் Christabel Pankhurst தலைமையில், றுளீரு உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி சிறையில் தங்கள் கட்டாய சிகிச்சை, உணவு அருந்துதலை எதிர்த்தனர்.

உண்ணாவிரத போராட்டங்கள் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக மாறின. ஏனெனில் அவை கூடுதல் தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. அதே காரணத்துக்காக மக்களிடம் அனுதாபத்தை பெரிதும் உருவாக்கியது.

1910 ஆம் ஆண்டில், பால் கிரேட் பிரிட்டனில் இருந்து அமெரிக்கப் பெண்களுக்கான சட்ட மற்றும் பொருளாதார சமத்துவத்துக்காக வேலை செய்யத் திரும்பினார். தேசிய அமெரிக்க பெண் வாக்குரிமை சங்கத்தில் (யேறுளுயு) சேர்ந்தார். 1890 மற்றும் 1910 இற்கும் இடையில், மாநில வாரியான மூலோபாயம் சில மேற்கு மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தெருக் கூட்டங்கள், அணி வகுப்புகள் மற்றும் மறியல் போராட்டங்கள் உட்பட இங்கிலாந்தில் அவர் பங்கேற்றது போன்ற தேசிய அளவில் போர்க்குணமிக்க எதிர்ப்பு உத்திகளுக்கு மாற வேண்டியது என்று அலஷ் பால் நம்பினார்.

**பெண் உரிமைக்காக உண்ணாவிரதம்**

இந்த அகிம்சை நடவடிக்கைகள் அனைத்தும் பெண் களின் தலைமை சரியான கிளர்ச்சியை பிரதிநிதித்துவப்ப டுத்துவதாக அமைந்தன. 1913 மார்ச் 3 ஆம் திகதி பெண் வாக்குரிமை ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்தனர். 8,000 இற்கும் மேற்பட்ட **(11ஆம் பக்கம் பார்க்க)**







# அமெரிக்க பெண் உரிமை போராட்டங்கள்: ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகம்!

**(10ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மக்கள் இந்த ஊர்வலத்துக்காக அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெண் உரிமைக்காக ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் மூலம் ஓகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

### ஈழத்தில் அன்னை பூபதி

ஈழத்தில் கோரமான போர் தீவிரம் அடைந்திருந்த 1988 இல் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தி, பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டி, அறப் போராட்டங்களை நடத்த மட்டு. - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

31 நாள் நோன்பிருந்த பத்துப் பிள்ளைகளின் தாயான அன்னை பூபதி மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர். பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை.

அன்னை பூபதி (நவம்பர் 3, 1932 - ஏப்ரல் 19, 1988), மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக சாகும்வரை உண்ணா நிலையிருந்து உயிர் நீத்தவர்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு. - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கு எதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். போரிடும் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும். இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையின் பின்னர் அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணா நோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

### அன்னையர் முன்னணி போராட்டம்

அப்போது பலர் சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணா நோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

### அன்னைபூபதி போராட்டம்

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக "சுயவிருப்பின் பேரில் உண்ணா விரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்தார்.

பத்துப் பிள்ளைகளுக்கு தாயார் இவர். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணா விரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக




ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார்.

அன்னை பூபதியின் நினைவு நாள் ஈழத்தில் நாட்டுப்பற்றாளர் நாளாக என்றும் நினைவு கூறப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் பெண்கள் அடக்குமுறைகளை எதிர்க்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஓர் எழுச்சி வடிவமாகவே கருதி போராடி இருக்கின்றனர். உயிரீகத்தின் உச்சம் தொட்ட அன்னை பூபதியம்மா ஈழ மண்ணில் தன் உயிர்க் கொடையால் தியாகத் தாயாக என்றும் விளங்குகின்றார்.

# புகழ்பெற்ற தொழில் நகரமாக தூத்துக்குடி மீண்டும் மிளிரும்

## கனிமொழி உறுதி



"தூத்துக்குடிக்கு பல தொழில் நிறுவனங்களைக் கொண்டு வர வேண்டும். முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்ற முனைப்போடு தமிழக முதல்வர் ஸ்டாலின் இருக்கிறார். அதனால், விரைவில் தூத்துக்குடி மறுபடியும் ஒரு புகழ்பெற்ற தொழில் நகரமாக மிளிரும் என்பதில் நம்பிக்கையோடு இருக்கிறேன். "

– இவ்வாறு தி.மு.கவின் எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் தி.மு.க. சார்பில் இரண்டாவது முறையாக போட்டியிடும் கனிமொழி, வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக இன்று காலை சென்னையில் இருந்து விமான மூலம் தூத்துக்குடிக்கு சென்றார்.

விமான நிலையத்தில் அவருக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் தலைமையில் தி.மு.க வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

"கடந்த ஐந்து ஆண்டுகளில் இங்கே பணியாற்றியபோது உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடியை பொறுத்தவரையில் தண்ணீர் என்பது எப்போதும் பிரச்சினையாக இருந்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக விளாத்திகுளம் வரை இருக்கக்கூடிய தண்ணீர் பிரச்சினையை சரி செய்வதற்கு 363 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு குடிதண்ணீர் திட்டம் தொடங்கப்பட்டு நிறைவடையக்கூடிய நிலையில் இருக்கிறது.

திருச்செந்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு மிகப்பெரிய திட்டம் தீட்டப்பட்டு அதற்கு முதல்வர் ஒப்புதலும் அளித்திருக்கக் கூடிய நிலையில் மிக விரைவிலேயே அந்த திட்டமும் நிறைவேற்றி தரப்படும்.

அது மட்டும் இல்லாமல் சமீபத்தில் முதல்வர் தூத்துக்குடி மாவட்டத்துக்கு வந்து வின்பாஸ்ட் என்ற கார் கம்பெனியை 16 ஆயிரம் கோடி ரூபா முதலீட்டில் தொடங்கி வைத்துள்ளார்கள். அந்த வேலையும் தொடங்கப்பட்டுள்ளது அந்த வின்பாஸ்ட் நிறுவனமும் தூத்துக்குடியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கு பயிற்சி கொடுத்து வேலைவாய்ப்பு தருவோம் என உறுதியை தந்திருக்கிறார்கள். அதே போல் இன்னும் பல நிறுவனங்களை தூத்துக்குடிக்கு கொண்டு வர வேண்டும், முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்ற முனைப்போடு முதல்வர் இருக்கிறார். விரைவில் தூத்துக்குடி மறுபடியும் ஒரு புகழ்பெற்ற தொழில் நகரமாக மிளிரும் என்பதில் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

மத்தியில் ஆட்சி மாற்றம் உருவாகும் போது தமிழ்நாட்டில் இருந்து நீட் தேர்வு நிச்சயமாக விலக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களை யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தபோது மக்களுக்கு எதுவுமே செய்யாத முதல்வர் என்றால் அது எடப்பாடி பழனிச்சாமி தான். அவர் கேள்வி கேட்பது தான் வருத்தமாக இருக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசு மக்களுக்கு எதிராக கொண்டு வந்து அனைத்து திட்டங்களுக்கும் ஆதரவாக வாக்களித்தவர்கள் தான் அ.தி.மு.கவினர் என்பதை எடப்பாடி மறந்திருக்க மாட்டார் என நினைக்கிறேன்." – என்றார்.

# தி.மு.க. கூட்டணிக்கு கருணாஸின் முக்குலத்தோர் புலிப்படை ஆதரவு



"பா.ஜ.க. எனும் பாசிச சனாதன சக்தியை வீழ்த்த, அடிமை அ.தி.மு.கவை விரட்ட, நாம் ஒரு குடையின் கீழ் அணியமாக வேண்டியிருக்கிறது. அதற்காக தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவளிக்கின்றோம்."

– இவ்வாறு முக்குலத்தோர் புலிப்படை அமைப்பின் தலைவர் கருணாஸ் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து கருணாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பா.ஜ.க. எனும் பாசிச சனாதன சக்தியை வீழ்த்த, அடிமை அ.தி.மு.கவை விரட்ட, நாம் ஒரு குடையின் கீழ் அணியமாக வேண்டியிருக்கிறது. அதற்கான களமாக இந்த மக்களவை தேர்தலை பயன்படுத்தி நாட்டை காக்க வேண்டும்.

மதவெறி சக்திகளை அடியோடு வீழ்த்தி, இந்தியாவில் மதநல்லிணக்கம் மாண்புற, மக்கள் ஜனநாயகத்தை மீட்க, சமூக நீதியை காக்க 'இண்டியா' கூட்டணியை 2024 மக்களவை தேர்தல் களத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்கிற ஒற்றை இலக்குடன் தி.மு.கவை முக்குலத்தோர் புலிப்படை கட்சி ஆதரிக்கிறது.

இனி மோடி ஆட்சி மீண்டும் வந்தால் இந்திய பெருமுதலாளிகளின் கையில், கார்ப்ரேட்டின் கொள்ளைக் கூடாரமாகிவிடும். கடந்த 10 ஆண்டுகாலமாக மத்தியில் ஆட்சி செய்த பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத ஆட்சியை அகற்றிட, தமிழகத்தில் அடிமை துரோகக் கட்சியான அ.தி.மு.கவை இந்த மக்களவை தேர்தலில் தோற்கடித்திட நமக்கு கிடைத்த சரியான வாய்ப்பாகும்.

தி.மு.கவுக்கு பல்வேறு தோழமைக் கட்சிகள் தமது ஆதரவை தெரிவிக்கும், அதேவேளையில் பலம் வாய்ந்த இந்தக் கூட்டணியை 40 இடங்களிலும் வெற்றி பெற செய்ய தி.மு.கவுக்கு எங்களது ஆதரவை தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்கள் விரோத சனாதன சக்திகளை விரட்ட, அடிமை துரோக அ.தி.மு.கவை வீழ்த்த திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து 40 தொகுதிகளிலும் முக்குலத்தோர் புலிப்படைக் கட்சி தனது பிரச்சாரத்தை மேற்கொள்ளும்." – என்றார்.



# சி.விஜயபாஸ்கர் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் உள்ள அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கரின் வீட்டில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனை நடத்தினர்.

தமிழகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 9 ஆண்டுகள் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்தவர் சி.விஜயபாஸ்கர். இவர் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டப்பேரவை உறுப்பினராக உள்ளார்.

இந்த நிலையில், குட்கா முறைகேடு, இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்ப்பு உள்ளிட்ட காரணங்களால் ஏற்கெனவே அமலாக்கத் துறையினர், வருமான வரித் துறையினர், தமிழக ஊழல் தடுப்பு துறையின் அதிகாரிகள் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீடு, அலுவலகம், கல்குவாரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அவ்வப்போது சோதனை நடத்தினர்.

தற்போது, மக்களவைத் தேர்தலில் கட்சிகளுக்கு தொகுதி ஒதுக்கீடு, வேட்பாளர் நியமனம் உள்ளிட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், இலுப்பூரில் உள்ள முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் வீட்டில் 3 கார்களில் வந்த அமலாக்கத் துறையினர் இன்று காலையிலிருந்து அதிரடியாக சோதனை நடத்தினர் .

இந்தத் தகவலை அறிந்து அ.தி.மு.கவினர் மற்றும் சி.விஜயபாஸ்கரின் ஆதரவாளர்கள் ஏராளமானோர் அவரது வீட்டின் முன்பு திரண்டுள்ளனர். பாதுகாப்புப் பணியில் இலுப்பூர் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இந்திய தலைவர் அசாமில் கைது





அசாம் மாநிலத்தின் துப்ரி மாவட்டத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இந்திய பிரிவு தலைவர் மற்றும் அவரது கூட்டாளி கைது செய்யப்பட்டுள்ளனர். அசாம் மாநில பொலிஸாரின் சிறப்பு படைப் பிரிவு அதிகாரிகள் அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த இருவர் சர்வதேச நாடுகளின் எல்லையை கடந்து அசாமில் ஊடுருவி உள்ளனர் என அந்த மாநில பொலிஸாருக்கு நம்பத்தகுந்த வட்டாரத்தில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

அதையடுத்து சிறப்பு படைப் பிரிவு அதிகாரிகள் துப்ரியில் தேடுதல் பணியை மேற்கொண்டனர். அதன் மூலம் நேற்று ஹரிஸ் ஃபருக்கி என்கிற ஹரிஸ் அஜ்மல் ஃபருக்கி மற்றும் அனுராக் சிங் என்கிற ரெஹான் ஆகியோரை கைது செய்தனர்.

இதில் ஃபருக்கி, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இந்திய பிரிவு தலைவர் என தெரியவந்துள்ளது. இவர் தேசிய புலனாய்வு முகமையால் தேடப்படும் குற்றவாளி ஆவர். இந்தியாவில் தீவிரவாத செயல்களுக்கு திட்டம் தீட்டுவது, அதற்கான ஆட்களை பணியமர்த்துவது போன்ற பணிகளை கவனித்து வந்துள்ளார். அனுராக் சிங் என்கிற ரெஹான் பங்களாதேஷ் பெண்ணை திருமணம் செய்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் கைது செய்த பொலிஸ் அதிகாரிகள், அவர்களை தேசிய புலனாய்வு முகமை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




# இந்தோனேசிய ஜனாதிபதித் தேர்தலில் பிரபோவோ சுபியன்டோ வெற்றி

இந்தோனேசிய ஜனாதிபதி தேர்தலில் அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ சுபியன்டோ வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் அவர் 58.59 வீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார் என அந்த நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அவர் பதவியேற்கவுள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பதவி விலகினார் வியட்நாம் ஜனாதிபதி



கடந்த ஆண்டு வியட்நாம் ஜனாதிபதியாக பதவியேற்ற வோ வான் துவாங் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

வோ வான் துவாங் தனது சொந்த காரணங்களுக்காக ஜனாதிபதி பதவி விலகியுள்ளார் என அந்த நாட்டின் அரசு ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வியட்நாம் ஜனாதிபதி வோ வான் துவாங்கின் பதவி விலகலை அந்த நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

வியட்நாமின் ஆளும் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இதனிடையே கட்சியின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் ஜனாதிபதி வோ வான் துவாங் செயற்பட்டுள்ளார் என கொம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கட்சியின் நற்பெயருக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக வியட்நாம் கொம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிட்டுள்ளது. இந்த சூழலில் வோ வான் துவாங் பதவி விலகியுள்ளார்.




# அயர்லாந்து பிரதமர் இராஜினாமா செய்தார்

அயர்லாந்து பிரதமர் லியோ வராத்கர், தனது பதவியை இராஜினாமா செய்கின்றேன் என அறிவித்துள்ளார்.

45 வயதான இவர் 2022 ஆம் ஆண்டு முதல் அயர்லாந்தின் பிரதமராக பதவி வகித்து வருகின்றார்.

தனிப்பட்ட மற்றும் அரசியல் காரணங்களால் தனது பதவியை இராஜினாமா செய்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.





# டுபாய் விமான நிலையத்தின் ஓடுபாதையில் இப்தார் நிகழ்ச்சி

உலகில் முதல் முறையாக டுபாய் சர்வதேச விமான நிலைய ஓடு பாதையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வானது நேற்றைய தினம் இடம்பெற்றுள்ள நிலையில், தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகமாக பேசப்பட்டு வருகின்றது.

ரமலானையொட்டி இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகள் நடந்து வரும் நிலையில், பள்ளிவாசல்கள், கூடாரங்களில் நடைபெறும் இப்தார் நிகழ்ச்சிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று நோன்பு திறந்து வருகின்றனர்.

இந்த நிலையில் டுபாய் சர்வதேச விமான நிலைய ஓடு பாதையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்துள்ளது.

விமானங்கள் தரையிறக்கப்படும் ஓடுபாதையில் நடந்த இப்தார் நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல கலாசாரங்களை கொண்ட விமான நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுக்கு பேரீச்சம் பழம், தண்ணீர், குளிர்பானம், பிரியாணி உள்ளிட்ட உணவுகளும் வழங்கப்பட்டன. இந்த நோன்பு திறக்கும் நேரம் வந்ததும் அனைவரும் பிரார்த்தனை செய்து நோன்பை திறந்தனர்.

அவர்கள் நோன்பை திறந்த போது விமானங்கள் தரையிறங்குவது, புறப்படுவது நடந்து கொண்டிருந்தது.

இந்த விடயம் குறித்து டுபாய் விமான நிலைய அதிகாரி தெரிவிக்கையில்,

“டுபாய் சர்வதேச விமான நிலைய ஊழியர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தை ஏற்படுத்தும் வகையில் விமான நிலைய ஓடுபாதையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மிகவும் பரபரப்பான சூழலில் வேலை செய்து வந்தவர்கள் அதனை மறந்து பலரும் விளையாட்டாக பேசிக் கொண்டு மன இறுக்கத்தை மறந்து செயல்பட்டனர்.

விமான நிலையத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானது அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தொடர்ந்து இதுபோன்ற வித்தியாசமான நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.” – என்றார்.

டுபாயில் கின்னஸ் உலக சாதனைகள் பல வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக விமான ஓடு பாதையில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.









கனடா முரசு
பக்கங்கள் - 5
வியாழக்கிழமை 21/03/2024

## நிக்கோட்டின் பைகள் விற்பனைக்கு எதிராக சுற்றிவளைப்பு நடவடிக்கை?

ஒன்ராரியோ, மார்ச் 21

சிறுவர்கள் மத்தியில் விற்பனை செய்யப்பட்டு வரும் நிக்கோட்டின் பௌச்சஸ்களுக்கு (பைகளுக்கு) எதிராக பெரும் சுற்றிவளைப்பு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக C2



# வெடுக்குநாறி சிவன் கோவிலில் மத சுதந்திரத்தை பேணிப் பாதுகாப்பதற்கு கனடா தலையீடு அவசியம்

## கனடிய வெளிவிவகார அமைச்சருக்கு கனடிய தமிழர் பேரவை கடிதம்

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ஒன்ராரியோ, மார்ச் 21

**இலங்கையின் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் தமிழ் சமூகத்தின் சமய சுதந்திரம் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க அவசர தலையீடு கோரி கனடிய வெளிவிவகார அமைச்சருக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்றை கனடிய தமிழர் பேரவை அனுப்பியுள்ளது.**

**மார்ச் 19ஆம் திகதியிடப்பட்ட இந்த கடிதத்தில், வெடுக்குநாறிமலையில் அமைந்துள்ள ஆதிசிவன் ஆலயமானது தமிழ் இந்து சமூகத்திற்கு மிகவும் முக்கியமானது என கனடியத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.**

வருந்தத்தக்க வகையில், மார்ச் 8, 2024 அன்று இரவு, மகா சிவராத்திரி அனுசரிக்கப்படும் போது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் நீதித்துறை ஆணைகளை முற்றிலும் மீறுவனவாகவும், இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட பிரிவினர் வெடுக்குநாறிமலைப் பகுதியைச் சுற்றி வளைத்து, நிகழ்வின் புனிதத்தன்மையையும், வழிபாட்டாளர்களின் கண்ணியத்தையும் மிக மோசமாக மீறும் செயல்களில் ஈடுபட்டதன் மூலம், அச்சுறுத்தும் வகையில் படையெடுப்பு அதிகரித்துள்ளதாக அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் கனடாவின் குரல் ஒரு சக்திவாய்ந்த சக்தியாகும் எனத் தெரிவித்துள்ள கனடியத் தமிழர் பேரவை, இந்த விடயத்தில் கனடிய அரசாங்கத்தின் தலையீடு இந்த உலகளாவிய விழுமியங்களுக்கான கனடாவின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், இலங்கையில் அமைதி மற்றும் மத சகவாழ்வை மீட்டெடுப்பதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளது. C2

# சீனாவுடன் தொடர்புகளைப் பேணிய கனடிய விஞ்ஞானிகள் விசாரணையில்!

## பொருத்தமான செயற்பாடு என்கிறார் சுகாதார அமைச்சர்

ஒன்ராரியோ, மார்ச் 21

சீனாவுடன் தொடர்பை வைத்திருந்தமைக்காக இரண்டு கனடிய விஞ்ஞானிகள் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றமை மிகவும் பொருத்தமான செயற்பாடு என சுகாதார அமைச்சர் மார்க் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு நேர்மையாக செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் தேசிய நுண்ணியல் ஆய்வுகூடத்தினைச் சேர்ந்த இரு ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2021ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டமையுடன், அவர்களுக்கான பாதுகாப்பு விடுவிப்பும் நீக்கப்பட்டது.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், C2



# காஸா தொடர்பான கனடாவின் தீர்மானம் இஸ்ரேலுக்கு மனவருத்தம் தந்துள்ளதாம்!

## குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தகவல்



ஒன்ராரியோ, மார்ச் 21

நாடாளுமன்றத்தில் மார்ச் 18ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடர்பான பிரேரணையானது காஸாவிலிருந்து கனடாவில் புகலிடம் கோருபவர்களின் செயற்பாட்டை கடினமானதாக்கும் என குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, பயன்பாட்டில் உள்ள இந்த நிகழ்ச்சிக்கு நாடாளுமன்ற பிரேரணையானது பல்வேறு தடைகளை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையானது பல்வேறு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த பிரேரணைக்கு லிபரல் கட்சியினரால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் நியாயமானவை என்பதுடன், கோட்பாடு சார்ந்தவை என அமைச்சர் மில்லர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணையானது இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு மனவருத்தை ஏற்படுத்தியுள்ளதால், அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை தடை செய்தல் உள்ளடங்கலாக பிரேரணையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள், இஸ்ரேலின் தற்பாதுகாப்பு செயற்றினை வலுவிழக்கச் செய்யும் எனவும், வரலாறு கனடாவை கருணையுடன் பார்க்காது எனவும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வெடுக்குநாறி சிவன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பாரதூரமான அபிவிருத்திகளின் வெளிச்சத்தில், கனடியத் தமிழ் காங்கிரஸ் உங்கள் மதிப்பிற்குரிய வழிகாட்டுதலின் கீழ் கனேடிய அரசாங்கத்தை மரியாதையுடன் கேட்டுக் கொள்கிறது:-

வெடுக்குநாறிஆதி சிவன் கோவிலின் புனித தலத்திற்கும் பக்தர்களுக்கும் எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பகிரங்கமாக கண்டிக்குமாறும், மத நடைமுறைகளுக்கு எதிரான விரோதங்களை உடனடியாக நிறுத்துவதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளை, குறிப்பாக மத சுதந்திரம் தொடர்பானவற்றை நிலைநிறுத்துவதை உறுதி செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் இராஜதந்திர ரீதியாக ஈடுபடுமாறும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கைக்குள் மத சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச முயற்சிகள் மற்றும் உரையாடல்களை ஆதரிக்குமாறும் கனடித் தமிழர் பேரவை கனடிய அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இந்த அவசரமான விடயத்தில் கனடிய அரசாங்கத்தின் கவனத்திற்கு நன்றி தெரிவிப்பதோடு, நேர்மறையான முடிவை எளிதாக்குவதற்குத் தேவையான கூடுதல் தகவல் அல்லது உதவியை வழங்க தயாராக இருப்பதாகவும் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளது.

சுதந்திரம் மற்றும் மனித கண்ணியம் ஆகியவற்றிற்காக கனடிய அரசாங்கத்தின் ஆதரவு தமிழ் சமூகத்திற்கும் நியாயமான மற்றும் சமமான உலகத்–திற்காக பாடுபடும் அனைவருக்கும் விலைமதிப்பற்றது எனவும் கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

### நிக்கோட்டின் பைகள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சர் மார்க் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.

புகைத்தலை நிறுத்துவதற்கு உதவி செய்யும் ஒரு பொருளாக கனடாவின் சுகாதாரத் துறையை ஏமாற்றி இம்பீரியல் டொபாக்கோ நிறுவனம் இந்த வாய்மூலம் உள்ளெடுக்கும் நிக்கொட்டின் பௌச்சஸ்களை இறக்குமதி செய்து வருவதாக சுகாதார அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பொருளானது புதிய தலைமுறையை நிக்கோட்டினை நோக்கி ஈர்–த்துவருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த உற்பத்திக்கான சந்தைகளை கட்டுப்படுத்தும் திட்டம் தொடர்பாக சுகாதார அமைச்சரினால் மாநில அரசாங்கங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஷொன்னிக் என அழைக்கப்படும் இந்த உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கு எவ்வித தவறான வழிகளையும் பின்பற்றவில்லை எனவும், கனடாவின் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றியே அனுமதி பெறப்பட்டது எனவும் இம்பீரியல் டொபாக்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சருடன் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும், தமது உற்பத்திக்கு இவ்வாறான தடை விதிக்கப்படுமாயின், சந்தையில் உள்ள ஏனைய நிக்கொட்டின் தடுப்பு உற்பத்திகளுக்கும் அந்த தடை விதிக்கப்பட வேண்டும் என இம்பீரியல் டொபாக்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

### சீனாவுடன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானிகளான ஷாயாங்குவா கியு மற்றும் அவரது கணவர் கெடிங் செங் ஆகியோர் சீனாவுடன் நெருக்கமாக செயற்பட்டனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவர்கள் இருவருக்கும் எதிராக 2019ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் தொடர்வதாக மார்ச் 20ஆம் திகதி பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த விஞ்ஞானிகளின் செயற்பாடு தமக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் ஹொலன்ட் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைகள் தொடர்பில் கருத்து தெரிவிப்பது தகுந்தது அல்ல என குறிப்பிட்டுள்ள அமைச்சர் ஹொலன்ட், விசாரணைகள் மிகவும் பொருத்தமானவை என வலியுறுத்தியுள்ளார்.



# மத்திய பொதுத் துறையின் சேவை குறித்து விமர்சனம்

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்21

பிரிட்டிஷ் கொலம்பியா சிறைச்சாலையில் இரசாயன திரவக் கசிவினைக் கொண்ட குழாய்களைத் திருத்துவதற்கு சுமார் நான்கு வருடங்கள் எடுத்துக் கொண்டமையை மத்திய பொதுத் துறை நேர்மைத்திறன் ஆணையாளர் விமர்சித்துள்ளார்.


இது ஒரு மிக மோசமான முகாமைத்துவம் என ஆணையாளர் ஹெரியட் சொலோவே தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின், எபோட்ஸ்போட் பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலையில் மில்லியன் கணக்கான லீற்றர் இரசாயனக் கழிவுடனான நீர் கசிந்துள்ளது என சொலேவே சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து மீளாய்வு செய்து பார்த்த போது கனடாவின் நன்னடத்தை சேவைகள் பிரிவானது தகுந்த நேரத்தில், பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை தெளிவாக தெரிவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்ரேலின் பிரதமரைக் காட்டேரியாக சித்திரித்தமைக்கு மன்னிப்புக் கோரல்!

## கியூபெக்கின் லா பிரஸ் பத்திரிகை இறைஞ்சல்






கியூபெக்,மார்ச் 21

கியூபெக் பத்திரிகையான லா பிரெஸ் இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவை காட்டேரி போன்ற கேலிச் சித்திரமாக பயன்படுத்தியமைக்காக மன்னிப்பு கோரியுள்ளது.

1922ஆம் ஆண்டில் வெளியான பேசும் படம் ஒன்றில் வரும் காட்டேரியை சித்திரிக்கும் வகையில் இந்த கேலிச் சித்திரம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

யூத எதிர்ப்பு கருத்தியலை பரப்புவதாக தெரிவித்து தமது இணையத் தளத்தில் இருந்து இந்த கேலிச் சித்திரத்தை லா பிரெஸ் பத்திரிகை நீக்கியிருந்தது.

இந்த கேலிச் சித்திரம் யூதர்களை காட்டேரிகளாக உருவகப்படுத்துவதாகவும், ஜெர்மனியில் நாசிக்கள் பயன்படுத்திய பிரசார உத்தியைப் பயன்படுத்துவதாகவும் அரசியல் வர்ணனையாளர்கள் விமர்சித்திருந்தனர்.



# காலநிலை கொள்கை விடயம் தொடர்பில் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை?

## எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் தயாராகின்றாராம்

ஒன்ராறியோ, மார்ச் 21

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் அரசாங்கத்தின் காலநிலை கொள்கை தொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலான நகர மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் பியர் பொலிவருக்கு ஆதரவாக கருத்துக்களை எழுப்பிவரும் நிலையில், 'பொலிவர் ஒரு பொய்யர்' என சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்போட் தெரிவித்துள்ளார்.

கனடியர்களுக்கு ஒரு சதமேனும் விரயம் ஏற்படாத வகையில் கார்பன் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர் கில்போட் சவால் விடுத்துள்ளார்.

ஆரம்பம் முதலே கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள் லிபரல் அரசாங்கத்தின் காலநிலை சார்ந்த கொள்கைகளை எதிர்த்து வருகின்றனர்.

ஆனாலும், எதிர்க்கட்சித் தலைவராக பியர் பொலிவர் தெரிவானது முதல், இந்த அரசாங்க எதிர்ப்பு பெரும் கவனத்தை ஈத்துள்ளது.

# மத்திய தேர்தல் சட்டத் திருத்தங்களை முன்மொழிகின்ற சட்டமூலம் சமர்ப்பிப்பு



ஒன்ராறியோ, மார்ச் 21

புதிய ஜனநாயகக் கட்சியுடனான கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மத்திய தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை முன்மொழியும் சட்டமூலத்தை லிபரல் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீட்டிற்கு எதிராக பாதுகாப்பினை வலுப்படுத்தி கனடியர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தும் ஆற்றலை பரவலாக்கும் வகையில் புதிய திருத்தங்கள் அமைந்துள்ளன என ஜனநாயக நிறுவனங்களுக்கான அமைச்சர் டொமினிக் ல பிலாங்க் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுமாயின், இரண்டு நாள்கள் முன்கூட்டிய வாக்களிப்பினை சாத்தியப்படுத்துவதுடன், பல்கலைக்கழக வாக்களிப்பு நிகழ்ச்சியை நிரந்தரமாக்கி, தமது தேர்தல் தொகுதியில் எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும் வாக்காளர்கள் வாக்களிக்கக் கூடிய வாய்ப்பினை அளிக்கும்.

நீண்ட கால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்களுக்கு இணைய வழி வாக்களிப்பினையும், தபால் மூலமான வாக்களிப்பு முறையை வலுப்படுத்தும் ஏற்பாடுகளும் புதிய சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்த புதிய சட்டமூலத்தில் அமைச்சர் ல பிலாங்குடன் இணைந்து செயற்பட்டவருமான நாடாளுமன்ற உறுப்பினர் டேனியல் பிளாங்கி, தமது வேலை நேரத்தையும், குடும்ப நேரத்தையும் சமன்செய்துகொண்டு வாக்களிப்புக்குச் செல்வதற்கு சிரமங்களை எதிர்கொள்பவர்களுக்கு இந்தச் சட்டமூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை கொண்டு வரும் என தெரிவித்தார்.

இந்த மாத இறுதியில் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி மனிடோபாவின் முதல்வருடனான தமது பணியைத் தொடர்வதற்கான பிளாங்கி செல்லவுள்ள நிலையில், இது அவருடைய கடைசி செய்தியாளர் சந்திப்பாக கருதப்படுகின்றது.

# வைத்தியசாலைகளில் இருந்து 300 பேர் நீண்ட கால பராமரிப்பு இல்லங்களுக்கு!

## ஒன்ராரியோவில் இந்த நடவடிக்கை



ஒன்ராரியோ, மார்ச் 21

ஒன்ராரியோவைச் சேர்ந்த சுமார் 300 பேர் தமது சொந்த விருப்பமின்றி, நீண்ட கால பராமரிப்பு நிலையங்களுக்கு மாற்றப்படடுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வருடத்திற்கு முன்னர் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய சட்டத்திற்கு அமையவே இந்த மாற்றம் நிகழ்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் இடநெருக்கடியை சமாளிக்கும் வகையில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

தமது வீடுகளில் இருந்து 70 கிலோமீற்றர்கள் முதல் 150 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள நீண்ட கால பராமரிப்பு இல்லங்களுக்கு இவர்களை மாற்றுவதற்கும், மறுக்கும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையில் இருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 400 டொலர்களை அறவிடுவதற்கும் இந்த புதிய சட்டம் அனுமதிக்கின்றது.

இதனடிப்படையில், வைத்திய சாலையின் பராமரிப்பு தேவைப்படாத 300 பேர், நீண்ட கால பராமரிப்பு இல்லங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# கார்பன் வரி உயர்வை நிறுத்துவதற்கான கன்சர்வேடிவின் பிரேரணை தோற்கடிப்பு



ஒன்ராரியோ, மார்ச் 21

ஏப்ரல் 1 கார்பன் வரி உயர்வை நிறுத்துவதற்கான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி மார்ச் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவித்து சுற்றுச்சூழல் அமைச்சர் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான எந்தவொரு செயற்பாட்டையும் இடைநிறுத்த முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் இந்த வார தொடக்கத்தில் வருடாந்த கார்பன் வரி உயர்வை நிறுத்துவதற்கான ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.

ஏப்ரல் முதலாம் திகதி அதிகரிக்கப்படவுள்ள கார்பன் வரி அதிகரிப்பை தடுக்கும் நோக்கத்துடன் இது சமர்ப்பிக்கப்பட்டது.

லிபரல் கட்சியினர், புதிய ஜனநாயகக் கட்சியினர் மற்றும் கியூபெக் புளொக் கட்சியினர் இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்தமையால் பிரேரணை இறுதியில் தோற்கடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வரி அதிகரிப்பின் பின்னர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் பொலிவர் தெரிவித்துள்ளார்.